1980 ஜூலை 5]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, நதிநீரைப் பெறுவதற்காக இன்னொரு பாரதப்போரைத் துவக்க இந்த அரசு தயாராக இல்லை. ஆகவே, பேச்சுவார்த்தையின் மூலமாக சுமுகமாக இப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கும்பகோணம் நகர காவல் நிலையத்தில் விசாரணைக் கைதி மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். ''கும்பகோணம் நகர காவல் நிலையத்தில் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள் அன்று செல்வராஜூ என்கிற இளைஞரை விசாரணைக்கு அழைத்துச் சென்று காவல் நிலையத்தில் அவர் இறந்துவிட்டதால் ஏற்பட்டுள்ள பதட்டமான நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு. செ. இராமலிங்கம், திரு. இ. எஸ். எம். பக்கீர் முகம்மது, திரு. எஸ். இராசாராமன், திரு. பொ. விஜயராகவன், திரு. ஆர். சுந்தரமூர்த்தி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே தஞ்சை மாவட்டம், கும்பகோணம் நகரக் காவல் நிலையத்தில் கடந்த 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள் அன்று செல்வராஜூ என்கிற வாலிபரை விசாரணை என்கிற பெயரால் காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்று அவர்மீது எந்த வழக்கும் பதிவு செய்யாமல் அவரைச் சட்டத்திற்குப் புறம்பாக காவல் நிலையத்தில் 3 நாட்கள் வைத்திருந்து ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், மூன்று கான்ஸ்டபிள்களும் சேர்ந்து 3 நாட்கள் தொடர்ந்து அடித்திருக்கிறார்கள். அவர் மீது எந்தவிதமான வழக்கும் பதிவு செய்யப்படாத நிலையில் அவரை அடித்திருக்கிறார்கள். அவ்வாறு அடிக்கப்பட்டு அவர் இறந்து வீழ்ந்த நேரத்தில் அவர் மீது இருக்கின்ற காயங்களைப் பார்த்து அந்தக் காயங்கள் குறித்து மருத்துவமனையிலே இருந்து புகார் வந்துவிடாமல் இருப்பதற்காக அந்தக் காயங்கள் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொளுத்தி இருக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதியிலே

[திரு. செ. இராமலிங்கம்] [1980 ஜூலை 5

மிகப் பெரிய பதட்ட நிலை ஏற்பட்டிருக்கின்றது. இன்றைய தினம் சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பேற்று இருக்கின்றவர்கள் என்ற நிலையிலே இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஒவ்வொரு நாளும் பார்க்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதிலும் குடந்தை போன்ற பகுதிகளில் சர்வ சாதாரணமான நிகழ்ச்சியாக இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஒரு வார காலத்திற்கு முன்னால் இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடந்திருக்கின்றது. காவல் நிலையத்தில் ஒரு கைதி அடித்து கொல்லப்பட்டிருக்கின்றார். இது இரண்டாவது சம்பவமாகும். ஆக, ஜூன் மாதத்திலேயே இரண்டு சம்பவங்கள் குடந்தை காவல் நிலையத்தில் நடைபெற்றிருக்கிறது. இந்நிலையில் காவல் நிலையம் செல்வதற்கே பொதுமக்கள் அஞ்சுகிறார்கள். இப்படிப் பட்ட ஒரு சூழ்நிலை அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, இது சம்பந்தமாக ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இது மிகப் பெரிய பதட்டமான நிலையை ஏற்படுத்தி இருக்கின்ற காரணத்தால் அவையின் இன்றைய அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: தலைவரவர்களே, கடந்த 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள் அன்று செல்வராஜு என்ற ஒருவரை குடந்தைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று தக்க முறையில் விசாரணை செய்யாமல் அங்கு அவருக்கு பெருத்த இன்னல்கள் பல விளைவித்து அதன் காரணமாக அவர் இறந்துவிடுகின்ற அளவுக்கு காயம் அடைந்திருக் கின்றார் என்பதைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். இது சம்பந்தமாக தாங்கள் கவனிக்கும்படி பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன். இதைப்போன்ற சம்பவங்கள் அந்த காவல் நிலையத்தில் இதற்கு முன்பும் நடந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இது குறித்து விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கும்படி கேட்டுக்கொள் கிறேன்.

*திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, கும்பகோணம் காவல் நிலையத்தில் செல்வராஜ் என்ற ஒருவரை விசார ணைக்காக அழைத்துச் சென்று, அந்த காவல் நிலையத்திலேயே அவர் இறந்து விட்ட ஒரு சூழ்நிலையை நாம் காண்கிறோம். இது மிக முக்கியமான விஷயம். காயத்துடன் இருக்கிறவர் மண் ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு தீ வைத்து தற்கொலை செய்து கொண்டார் என்ற அளவிற்கு செய்தி கொடுத்திருக்கிறார்கள். காவல் நிலையத்தில் லாக்-அப்பில் இருக்கிற சூழ்நிலையில் எப்படி மண்ணெண்ணெய் போக முடியும் என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால், இது எற்கெனவே திட்டமிட்டு செய்யப்பட்ட கொலை என்ற அளவில் சந்தேகத்திற்கு இடமளிக்கிற சூழ்நிலை இருக்கிறது.

1980 ஜூலை 5] [திரு. பொ. விஜயராகவன்]

இதை தீர விசாரித்து குற்றம் செய்தவர்கள் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும். குற்றவாளி யார், எந்த முறையில் தவறுகள் நடைபெற்று இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் தீர விசாரணை செய்தாக வேணடும். இது போன்ற நிலைமை காவல் நிலையத்தில் அடிக்கடி ஏற்படுமானால் பொது மக்கள் சாதாரணமாக சாட்சி சொல்லக்கூட காவல் நிலையத்திற்கு செல்ல மறுப்பார்கள், பயப்படுவார்கள் என்ற சூழ்நிலை உருவாகும் என்று சொல்லிக்கொண்டு இது போன்ற நிலைமை அடிக்கடி ஏற்படாமல் தடுப்பதற்கு தகுந்த விசாரணைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அப்படி ஏற்பாடு செய்வதற்கான விவரங்களை மேற்கொண்டு விவாதிப்பதற்கும், இந்த மன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு கிடைக்கப் பெற்றிருக்கிற தகவல்களின்படி 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் தேதி அன்று காலை 11—30 மணியளவில் தஞ்சை மாவட்டம் கும்பகோணம்—தெற்கு காவல் நிலையத்தில, மார்வாரி வகுப்பைச் சேர்ந்த செல்வராஜ் என்ற ஒருவர் 426/80 சம்பந்தப்பட்ட பிரிவின் கீழ், திருட்டுச் சொத்து வைத்திருந்ததாக கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டார். அங்கே அவரை உதவி ஆய்வாளர் விசாரணை செய்த பிறகு காவலர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் 2—45 மணிக்கு விட்டு விட்டு உணவு அருந்தச் சென்றார், பகல் 3 மணிக்கு கைதி செல்வராஜ், அங்கிருந்த காடா விளக்கிலிருந்த மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு, தீ வைத்துக் கொண்டார், அவர் உடனடியாக கும்பகோணம் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார். அவர் அன்று மாலையே தஞ்சாவூர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப் பட்டார். அங்கு அவர் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாளன்று காலை 6.05 மணி அளவில் இறந்து விட்டார்.

கும்பகோணம் சப்-கலெக்டர் பிரேத விசாரணை செய்தார். பி.எஸ்.ஓ. 145-வது பிரிவின் கீழ் விசாரணையை நடத்தும்படி கும்பகோணம் சப்-கலெக்டரைப் பணித்திருக்கிறார்கள். இது பற்றி விசாரணை தொடர்ந்து நடந்துக் கொண்டிருக்கிறது. இது பற்றிய முழு உண்மைகளை அறிய வேண்டியவர்களாக இருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சில பல தகவல்களைத் தந்திருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு வந்திருக்கிற தகவல்கள் உண்மையா அல்லது மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற தகவல்கள் உண்மையா என்பதை விசாரணை மூலமாகத்தான் அறிய முடியும். ஆனால், 2, 3 நாட்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்று கூறப்படுவது தவறு. 29-ம் தேதி 11 மணியளவில்தான் அவரை அழைத்து வந்தார்கள் 2½ மணி வரையில் உதவி ஆய்வாளர் அவரை

விசாரணை செய்திருக்கிறார். அது வரையில் அவர் அங்கே இருந்திருக்கிறார். அதற்குப் பிறகு காவலர் ஒருவரின் கீழ் அவரை விட்டுவிட்டுச் சென்ற பிறகு மாலை 3 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

காவல் துறையில், சிறைச்சாலைகளில் இருக்கிற பாதுகாப்புகளின் சூழ்நிலையே வேறு. ஆனால் இங்கே காவல் நிலையத்தில் உள்ள லாக்-அப்பில் அவ்வளவு பாதுகாப்பு வசதிகள் கிடையாது. அங்கே காடா விளக்கு உள்ளே இருப்பதும், வெளியே இருப்பதும் சர்வ சகஜம். சப்-கலெக்டர் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் உண்மையான சான்றுகள் இருக்குமேயானால் அவற்றை சப் கலெக்டர் இடத்திலே தருவீர்களேயானால், இச்சம்பவத்தின் உண்மையான நியாயமான அறிக்கையை அவர் அரசுக்கு அளிக்க உதவியாக இருக்கும். அறிக்கை வந்த பிறகு எடுக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். அளிக்க வேண்டிய தண்டனைகள் அளிக்கப்படும். என்ன இருந்தாலும் காவல் நிலையத்தில் இருக்கும் கைதி இறந்து விடுவது என்பது உள்ளபடியே எல்லோராலும் விரும்பத்தக்கதல்ல தான். இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை அரசுக்கும் காவல் துறையினருக்கும் இருக்கிறது. அதை பற்றிய ஆணைகள்கூட பிறப்பிக்கப்பட்டு அனுப்பப் பட்டுள்ளன. இருந்தாலும் சிற்சில சமயங்களில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுவிடுகின்றன. எதிர்காலத்தில் அவை நடைபெறாமல் இருப்பதற்கு தடுப்பதற்குதான் நாம் அனைவரும் இருக்கிறோம்.

இந்த விசாரணைக்குப்பின் அளிக்கப்படும் அறிக்கையின் மீது, தேவையான நடவடிக்கைகளை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும். விசாரணை நியாயமாக, நீதியாக நடைபெற இம்மன்ற உறுப்பினர்கள் இங்கே கூறிய தகவல்களையும் அந்த சப்-கலெக்டருக்கு அனுப்பிவைத்து உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விசாரணை எந்தவித தடையும் இல்லாமல் நடைபெறவேண்டும் என்பதற்காக, சம்பந்தப்பட்ட காவல் நிலைய உதவி ஆய்வாளரையும் கைதியை பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்த காவலரையும் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9–40]

ஆகவே விசாரணைக்கு உதவியாக இருக்கவேண்டும் என்பதற்காக அவர்கள் வேலையில் இருப்பது சரியாகாது என்று ஸஸ்பென்ட் செய்திருக்கிறார்கள். இதுகுறித்த விசாரணை முடிந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கைகள்

எடுக்க இந்த அரசு முனையும் என்று தெரிவித்து இதற்கு மேல் இதுகுறித்து இந்த அவையை ஒத்திவைத்து விவாதிப்பதனால் பயன் ஏற்படாது என்பதால அவையை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நம்முடைய அவை முன்னவர் அவர்கள் படித்த அந்த விடையிலிருந்து ஒரே ஒரு கருத்தை அவர்கள் இங்கே அவைக்கு தெரிவிக்கா விட்டாலும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். விசாரணை நடப்பதற்கு முன்னால் அதுபற்றிய தெளிவான கருத்து தெரிவது நல்லது என்பதற்காகச் சொல்கிறேன். காடாவிளக்கிலிருந்து மண்ணெண்ணையை ஊற்றிக்கொண்டுதானே எரித்துக் கொண்டார் என்ற கருத்து அங்கே வருகிறது. காடாவிளக்கில் இருந்து மண்ணெண்ணையை ஊற்றிக்கொண்டு தன்னையே எரித்துக் கொண்டபோது பார்த்துக் கொண்டிருந்தவர் யார்? பார்த்தவர் யாரேனும் சாட்சியாக இருந்து அவர் இந்த அரசுக்கு அதைத் தெரிவித்திருக்கிறாரா? அப்படி யாரும் பார்க்காமல் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியாகயிருந்தால் அப்படி நடைபெற்றது என்று போலீஸார் சொல்ல ஆதாரம் இருக்கிறதா என்று அரசாங்கம் விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்-தலைவர் அவர்கள் சொல்கிற ஐயப்பாடும் இதில் இருக்கிறது. காடாவிளக்கிலிருந்து மண்ணெண்ணையை ஊற்றிக்கொண்டு தீ வைத்துக்கொண்டார் என்றால் அதை காவலாளி பார்த்திருக்க வேண்டும். அல்லது வேறு ஒருவராவது பார்த்திருக்க வேண்டும். யார் காவல் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டாரோ அந்தக் காவலர்தான் இதற்குப் பொறுப்பு. அவர் பார்த்திருந்தால் தடுத்திருக்க வேண்டும். அவர் வேறு வேலையாக சென்று வேறு ஒருவர் இருந்திருந்தால் அதை அவர் செய்ய தவறியிருக்கிறார்கள். ஆக, இவற்றையெல்லாம் பற்றி சப்-கலெக்டரால் தீவிரமாக ஆராயப்படும் என்று தெரிவித்து அந்த அறிக்கை வந்த பிறகு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.